## 2. IMPORTANT G.Os

**2.114 தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு, பின்னர் 25.6.84 முதல் பணி வரன் முறை செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்கள் – நான்கு ஆண்டுகளுக்குள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சிப் பெறாத 267 நபர்களுக்கு துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற கால நீட்டிப்பு – அறிவுரைகள்**

---

ஊரக வளர்ச்சி (இ7) துறை

அரசாணை (3டி) எண். 7 நாள் : 27.03.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.349 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.12.4.84
2. அரசாணை (நிலை) எண்.996 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.22.9.84
3. அரசாணை (நிலை) எண்.548 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.19.6.87

**ஆணை**

தமிழ்நாடு அமைச்சுப்பணி, தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி, தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி ஆகியவற்றில் வேலைவாய்ப்புத்துறை மூலமாக பொது விதி 10(ஏ)(1)ன் கீழ் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் ஆகியோரில் 25.6.1984 அன்று பணிபுரிந்து கொண்டிருந்தவர்களை, அவர்கள் எந்தத் துறையில் பணிபுரிந்து கொண்டிருந்தார்களோ அதே துறையில் அவர்களின் பணியை முறைப்படுத்தி (Regularaised) அரசாணை நிலை எண்.996 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 22.9.84ல் ஆணை வெளியிடப்பட்டது, இவ்வாணை தேர்வாணையத்தின் ஒத்திசைவு பெற்று வெளியிடப்பட்டது.

2. பத்தி 1ல் குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு தமிழ்நாடு சிறப்பு ஏற்பு விதிகள் 1987 அரசாணை நிலை எண்.548 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 19.6.87ல் ஏற்படுத்தப்பட்டன. இந்த விதிகளில் விதி (9) கீழ் வருமாறு:–

9. தேர்வு மற்றும் பயிற்சிகள் ஒரு பணியில் தகுதிகாண் பருவம் முடிக்க ஆணை வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட சிறப்பு விதிகளில் எங்கெல்லாம் தேர்வு அல்லது தகுதியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அத்தேர்வுகளில் 1984 சிறப்பு ஏற்பு மூலம் பணியமர்த்தப் பட்டவர்கள் 19.6.87லிருந்து இரண்டு வருட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட தேர்வு அல்லது பயிற்சி முடிக்க வேண்டும். அவ்வாறு முடிக்காதவர்களுக்கு ஊதிய உயர்வு இரண்டாண்டுகளுக்கு திறன் விளைவு அல்லாமல் நிறுத்தப்படும். நான்காவது ஆண்டு காலத்திற்குள் குறிப்பிட்டுள்ள தேர்வு அல்லது பயிற்சியை முடிக்காவிட்டால் பொது நடைமுறைகளைக் கடைப்பிடித்து அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

3. அரசாணை நிலை எண்.349 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 12.4.1984ல் ஊரக வளர்ச்சித் துறையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள், ஊர்நல அலுவலர்கள் நிலை–2, காசாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்தர்கள் ஊரக வளர்ச்சி துறைத் தேர்வு மற்றும் ஊரக வளர்ச்சி கணக்குத் தேர்வு ஆகியவற்றில் தேர்ச்சி தகுதிகாண் பருவ காலத்திற்குள் பெற்றிருக்க வேண்டும் என்றும் ஊர்நல அலுவலர்கள் பயிற்சிக்கு செல்ல வேண்டும் என்றும் ஆணைகள் இடப்பட்டுள்ளன.

4. ஊரக வளர்ச்சித்துறை பல்வேறு பணியாளர்கள் சங்கங்கள் துறைத் தேர்வுகளில் நான்காண்டுகளுக்குள் தேர்ச்சி பெறாமல் குறிப்பிட்ட நாளுக்கு பின்னர் நாளது தேதி வரையிலும் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு தகுதி காண் பருவம் முடித்து ஆணையிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளனர். பணியாளர் சங்கங்களின் கோரிக்கையை அரசு விரிவாக ஆய்வு செய்தது.

5. வேலை வாய்ப்பகம் மூலம் 1983 முதல் 1984 வரை அரசின் வெவ்வேறு துறைகளில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள், சுருக்கெழுத்தர்கள் ஆகியோர் அவர்கள் சில காலம் பணிபுரிந்து மேற்கூறிய பணியிடங்களில் நிறைய அனுபவம் பெற்றிருப்பதால் அவர்களின் பணியை முறைப்படுத்தி ஆணையிடுமாறு விண்ணப்பித்திருந்தனர். இந்த விண்ணப்பத்தை பரிசீலித்து அரசாணை நிலை எண்.996 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 22.9.84 முதல் முறைப்படுத்தி ஆணையிடப் பட்டுள்ளது. இவ்வாணை தேர்வாணை ஒத்திசைவு பெற்று வெளியிடப்பட்டது. அவ்வாறு ஊரக வளர்ச்சி அலகில் பணியமர்த்தப்பட்ட நபர்களின் பணியினை முறைப்படுத்தி ஆணையிட்டு 13 ஆண்டு காலம் ஆகிவிட்டன. இந்த நிலையில் மேற்கூறிய பணியாளர்கள் துறைத் தேர்வில் நான்காண்டுகளுக்குள் (18.6.91க்குள்) தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்திற்காக தற்பொழுது அவர்களை பணியிலிருந்து நீக்குவது அவர்களது குடும்பத்திற்கு வறிய நிலையை ஏற்படுத்தும்.

**6.** எனவே, அரசு கீழ்க்காணும் ஆணையை பிறப்பிக்கின்றது, சிறப்பு ஏற்பு விதி 1987ன்படி ஊரக வளர்ச்சி அலகில் பணி முறைப்படுத்தப்பட்ட பணியாளர்கள், இந்த அரசாணை அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 267 நபர்கள் (I) துறைத்தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என்ற காரணத்தினாலோ அல்லது காலதாமதமாக தேர்ச்சி பெற்றாலோ அவர்களை பணியிலிருந்து நீக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம் என்றும் (II) அவர்கள் இவ்வாணை வெளியிடப்படும் தினத்திலிருந்து மூன்றாண்டுகளுக்குள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் (III) அவர்கள் துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளை வைத்து தகுதிகாண் பருவம் முடிக்க உத்திரவிட வேண்டும் என்றும் (IV) அவர்களுக்கு ஊதிய உயர்வு துறைத்தேர்வில் தேர்ச்சி பெற்ற நாளிலிருந்து வழங்கப்பட வேண்டும் என்றும் (ஏ) அவர்களுக்கு பதவி உயர்வு தகுதிகாண் பருவம் முடித்ததை கணக்கில் கொண்டு இதர தகுதிகளின் அடிப்படையிலும் வழங்கப்பட வேண்டும் என்றும் (VI) மற்றபடி அவர்களுக்கு தகுதிகாண் பருவம் முடித்திட துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையை நீக்க இயலாது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்த ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அரசு ஆணையிடுகிறது,

**7.** மேலே பத்தி 6ல் பிறப்பித்த ஆணையையொட்டி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணியின் பொது விதி 28 மற்றும் 1987ம் ஆண்டு தமிழ்நாடு சிறப்பு ஏற்பு விதி 9 ஆகியவைகளை தளர்த்தி ஆணையிட தேவையான செயற்குறிப்பினை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெற்று அரசுக்கு தொகுத்து அனுப்ப வேண்டுமென ஊரக வளர்ச்சி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்,

**8.** இவ்வாணை 20.3.98 நாளும் அ.சா.கு.13028/பி/98–1/எண்ணுமிட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை தெரிவித்துள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்